வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 19.3.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களை பத்திரமாக பூமிக்கு கொண்டு வருவதில், கடும் முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும், குடியரசு தலைவர் பிரதமர் ஆகியோர், பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சிறு தொகைக்கான BHIM-UPI பரிவர்த்தனைகளை அதிகரிக்கும் வகையில், ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுச்சேரியில் மஞ்சள் குடும்ப அட்டை வைத்துள்ள குடும்ப தலைவிகளுக்கும், ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மாற்றுத் திறனாளிகளுக்கு, **விலையில்லா 3 சக்கர மோட்டார் வாகனம்** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

*சுனிதா-வாழ்த்து*

சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கி இருந்த சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களை பத்திரமாக பூமிக்கு கொண்டு வருவதில், கடும் முயற்சிகளை மேற்கொண்ட நாசா விஞ்ஞானிகள் உட்பட அனைவருக்கும்,குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், பாராட்டு தெரிவித்துள்ளனர். இந்தியாவின் புதல்வியான சுனிதா வில்லியம்ஸ்சும் அவருடன் பயணித்த விண்வெளி வீரர்களும், தங்களின் அர்ப்பணிப்பு மற்றும் விடா முயற்சி மூலம் உலக

மக்கள் அனைருக்கும் ஊக்கமளித்து இருப்பதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி உள்ளார். வரலாற்று சிறப்பு வாய்ந்த விண்வெளி பயணத்தில் இருந்து திரும்பி உள்ள விண்வெளி வீரர்களின் உடல் நலத்திற்கு வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். விண்வெளி வீரர்களையும், விஞ்ஞானிகளையும் பாராட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவின் விவரங்கள்

…………

*சுனிதா-வாழ்த்து (13)*

சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்கள், விடா முயற்சி என்பதன் நிஜமான பொருள் என்ன என்பதையே மீண்டும் உலகிற்கு உணர்த்தி இருப்பதாக சமூக ஊடகப் பதிவில் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்த விண்வெளி வீரர்களின் செயல்பாடுகள், தைரியம், துணிச்சல் மற்றும் எல்லையற்ற மானுட உணர்வின் பரிசோதனையாகவே அமைந்திருப்பதாகவும், கண்காணாத, பரந்த விண்வெளியில் இவர்கள் காட்டி உள்ள அயராத மனஉறுதி, பல கோடி மக்களுக்கு நிரந்தர உணர்வூக்கமாகத் திகழும் என்றும் அவர் கூறி உள்ளார். குறிப்பாக விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், தமது தொழில் முறை வாழ்க்கை முழுவதிலும், துணிச்சல் மற்றும் விடா முயற்சியின் எடுத்துக் காட்டாகவே திகழ்ந்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். மானுட சக்தியின் எல்லைகளை விரிவாக்கி, கற்பனைக்கு எட்டாத கனவுகளையும் நனவாக்கும் துணிச்சலைக் குறிப்பதே விண்வெளிப் பயணம் என்று, அவர் மேலும் கூறி உள்ளார்.

*பரிசோதனை*

இதற்கிடையே, விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பிய சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்கள், மருத்துவ பரிசோதனைகளுக்காக, டெக்சாஸ் மாநிலம் ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். விண்வெளியில் நீண்டகாலம் இருப்பவர்களின் உடலில், தசை சிதைவு, எலும்பு அடர்த்தி குறைவு, கண் பார்வை குறைபாடு போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதும்,

உரிய பயிற்சிகளில் ஈடுபட்டாலும், புவி ஈர்ப்புத் தன்மைக்கு ஏற்ப உடல் மீண்டும் தன்னை மாற்றிக் கொள்ள நீண்டகாலம் ஆகலாம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ஜிதேந்திரா*

2035-ஆம் ஆண்டிற்குள் விண்வெளியில் சொந்தமாக விண்வெளி நிலையம் அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும், திட்டத்தின் எல்லா அம்சங்களும் வெற்றிகரமாக அமைந்தால், 2040-ஆம் ஆண்டிற்குள் இந்திய விண்வெளி வீரர் ஒருவர் நிலவில் தரை இறங்குவார் என்றும் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், சந்திரயான்-4 விண்கலம், 5 பகுதிகளைக் கொண்டதாக, 2 ராக்கெட்டுகள் மூலம் விண்ணில் செலுத்தப்படும் என்றார். ககன்யான் திட்டத்திற்கான முதலாவது விண்கலம், பெண் ரோபோ-வுடன், இவ்வாண்டு இறுதிக்குள் விண்ணில் ஏவப்படும் என அமைச்சர் தெரிவித்தார். ககன்யான் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 4 விண்வெளி வீரர்களை மக்களுக்கு ஏன் காட்டவில்லை என உறுப்பினர் ஒருவர் கேட்டதற்கு, விண்வெளி வீரர்களின் கவனம் சிதறிவிடக் கூடாது என்பதே இதற்கு காரணம் என அவர் பதில் அளித்தார். 9 மாதங்களுக்கும் மேலாக விண்ணில் சிக்கி இருந்த சுனிதா வில்லியம்ஸ் பத்திரமாக பூமிக்கு திரும்பியது, மிகப் பெருமையான, ஆறுதலுக்கு உரிய தருணம் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் மேலும் குறிப்பிட்டார்.

*அமைச்சரவை*

BHIM-UPI மூலமாக, பொது மக்கள் வணிகர்களுக்கு செலுத்தும் சிறு தொகைக்கான பரிவர்த்தனைகளை அதிகரிக்கும் வகையில், ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவிலான ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் இதைத் தெரிவித்தார். கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய, திருத்தி அமைக்கப்பட்ட தேசிய பால் வள மேம்பாட்டுத் திட்டத்திற்கும், திருத்தி அமைக்கப்பட்ட

தேசிய கோகுல் இயக்கத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மகாராஷ்டிர மாநிலம் பாகோட் முதல் சவுக் வரை, B-O-T முறையில், ஜவஹர்லால் நேரு துறைமுகத்திற்கு, 6 வழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அசாம் மாநிலம் நாம்ரூப்-பில் உள்ள, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உர உற்பத்தி நிறுவன வளாகத்தில், அமோனியா-யூரியா உற்பத்தி ஆலை அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதாக அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

*சிஆர்பிஎப்*

இன்று சிஆர்பிஎப் தினத்தை ஒட்டி, மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் அனைவருக்கும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, வாழ்த்து தெரிவித்துள்ளார். 1950-ஆம் ஆண்டு குடியரசு தலைவரின் விருது, மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கு வழங்கப்பட்ட நாள் ஆண்டுதோறும், சிஆர்பிஎப் தினமாக கொண்டாடப்படுகிறது. மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரின் வீரமும் தியாகமும், பல தலைமுறைகளாக தேச பக்தர்களுக்கு உணர்வூக்கம் அளித்து வருவதாக, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார். நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு தலை வணங்குவதாகவும் அவர் கூறி உள்ளார்.

*ரங்கசாமி-அறிவிப்பு*

புதுச்சேரியில் வறுமைக் கோட்டிற்கு மேல் வாழும் மஞ்சள் குடும்ப அட்டை வைத்துள்ள குடும்ப தலைவிகளுக்கும், ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார். இன்று சட்டப்பேரவையில், பட்ஜெட் மீதான விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் அவர் இதை அறிவித்தார். 21 முதல் 55 வயது வரை உள்ள, வேறு எவ்வித உதவியும் பெறாத, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பத் தலைவிகளுக்கு ஏற்கனவே வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். ரொட்டி-பால் திட்ட ஊழியர்களை, எம்டிஎஸ் ஊழியர்களாக மாற்றி, 18 ஆயிரம் ரூபாய்

ஊதியம் வழங்கப்படும் என்றும், முதலமைச்சர் அறிவித்தார். புதுச்சேரியில் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கான சேதராப்பட்டு நிலத்தில் தொழிற்பேட்டை விரைவில் அமையும் என்றும் அவர் கூறினார். பின்னர் முதலமைச்சர் திரு ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில்……………….

*ரங்கசாமி வாகனம்*

புதுச்சேரியில் சமூக நலத்துறை மூலம், மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா 3 சக்கர மோட்டார் வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 149 பயனாளிகளுக்கு, மொத்தம் 1.33 கோடி ரூபாய் செலவில், 3 சக்கர வாகனம் வழங்கும் பணிகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். தட்டாஞ்சாவடி மற்றும் ராஜ்பவன் தொகுதிக்கு உட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா 3 சக்கர வாகனங்களை அவர் வழங்கினார். சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சமூக நலத்துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு பிஆர் என் திருமுருகன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*நமச்சிவாயம்-ஹெல்மெட்*

இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிவதை உச்சநீதிமன்றம் ஏற்கனவே கட்டாயமாக்கி, மாதந்தோறும் வாகன விபத்துக்களை கண்காணித்து வருவதால் புதுச்சேரியில் மக்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் கூறி உள்ளார். கட்டாய ஹெல்மெட் பிரச்சனையில் அரசின் நிலைப்பாடு என்ன என்று, இன்று சட்டப்பேரவையில், காங்கிரஸ் உறுப்பினர் திரு வைத்தியநாதன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில், அவர் இவ்வாறு கூறினார். புதுச்சேரியில் ஹெல்மெட் அணியாத, இருசக்கர வாகன ஓட்டிகள் 37 ஆயிரத்து 107 பேருக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திமுக -ஆர்ப்பாட்டம்

தொகுதி மறுசீரமைப்பு உத்தேசம் பற்றிய பிரச்சனை தொடர்பாக, திமுக, காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே. கண்டன ஆர்ப்பாட்டதில் ஈடுட்டனர். மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுவரையறை செய்தால், தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என்று மூத்த திமுக தலைவர் திரு திருச்சி சிவா, செய்தியாளர்களிடம் கூறினார்.

வானிலை

தென் தமிழகம் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசைக் காற்று சந்திக்கும் பகுதியும் நிலவுவதால், வரும் 25-ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளையும், நாளை மறுநாளும், அதிக ஈரப்பதம், மற்றும், வெப்பநிலை இயல்பை விட அதிகமாக இருக்கும் நிலையில், தமிழகத்தில் ஒருசில பகுதிகளில், அசவுகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 21-ஆம் தேதி வரை வெப்பநிலையில் பெரிய மாற்றங்களுக்கு வாய்ப்பு குறைவு தான் என்றாலும், 22-23-ஆம் தேதிகளில், அதிக பட்ச வெப்பநிலை சற்று குறையலாம் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கால்பந்து

இந்தியா-மாலத்தீவு கால்பந்து அணிகள், இன்று மாலை ஷில்லாங்கில், சர்வதேச நட்புறவுப் போட்டி ஒன்றில் மோதுகின்றன. இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே வரும் 25-ஆம் தேதி ஷில்லாங்கில் நடைபெற உள்ள, AFC ஆசிய கோப்பை தகுதிச் சுற்றுப் போட்டிக்கான முழு ஒத்திகையாகவும், ஓய்வு பெற்ற நிலையில் இருந்து மீண்டும் சர்வதேச போட்டிகளுக்குத் திரும்பி உள்ள இந்திய வீரர் சுனில் சேத்ரி-யின் முதலாவது போட்டியாகவும் இன்றைய போட்டி அமைகிறது.

காண்டா மிருகம்

மேற்கு வங்க மாநிலம் **ஜல்பைகுரி** வனப் பகுதியில் உள்ள, **ஜல்தாபாரா, கோருமாரா,** மற்றும், **சப்ராமாரி** வனவிலங்கு சரணாலயப் பகுதிகளில், இம்மாதம் 5, 6 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின் படி, மாநிலத்தில் **ஒற்றைக் கொம்புக் காண்டா மிருகத்தின்** எண்ணிக்கை, **229** முதல் **392-ஆக** அதிகரித்துள்ளது. கடந்த 2022-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் இந்த எண்ணிக்கை 347-ஆக இருந்ததாக, மேற்குவங்க அரசின் வனத்துறை தெரிவித்துள்ளது. இம்முறை மேற்குவங்க மாநிலத்தின் **கோருமாரா** தேசியப் பூங்காவில் காண்டா மிருகங்களின் சராசரி எண்ணிக்கை, 61-ஆகவும், **ஜல்தாபாரா** தேசியப் பூங்காவில் 331-ஆகவும், மதிப்பிடப்பட்டுள்ளது. **ஜல்தாபாரா** தேசியப் பூங்கா, அசாமில் உள்ள **காசிரங்கா** பூங்காவிற்கு அடுத்தபடியாக, நாட்டிலேயே காண்டா மிருகங்கள் அதிகம் உள்ள 2-ஆவது வனப் பகுதியாகும்.

படகு விபத்து

மத்திய பிரதேச மாநிலம் ஷிவ்புரி அருகே மாதா டீலா அணையில் நேற்று மாலை படகு கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில், காணாமல் போனவர்களை கண்டுபிடித்து மீட்க, தேடுதல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அணையின் நீர்ப் பரப்பின் நடுவே, தீவில் அமைந்துள்ள கோவிலுக்கு படகில் சென்ற 15 பேரில் 8 பேர், ஏற்கனவே பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்து மத்திய பிரதேஷ் முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ், துயரம் வெளியிட்டுள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களை பத்திரமாக பூமிக்கு கொண்டு வருவதில், கடும் முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும், குடியரசு தலைவர், பிரதமர் ஆகியோர், பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சிறு தொகைக்கான BHIM-UPI பரிவர்த்தனைகளை அதிகரிக்கும் வகையில், ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுச்சேரியில் மஞ்சள் குடும்ப அட்டை வைத்துள்ள குடும்ப தலைவிகளுக்கும், ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மாற்றுத் திறனாளிகளுக்கு, **விலையில்லா 3 சக்கர மோட்டார் வாகனம்** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 19.3.2025/Script.

--------------------------